**செ.வெ.எண் :663** **நாள்: 11.10.2021**

## தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (11.10.2021) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பேசியதாவது:-

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்வி கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 355 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்களை விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுக்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்த விவரத்தை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

மேலும், இக்கூட்டத்தில் கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1 நபருக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கான ஆணையினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 1 நபருக்கு ரூ.1500/-க்கான மாதந்தோறும் உதவித் தொகைக்கான பெறுவதற்கான ஆணை மற்றும் 1 நபருக்கு மாற்றுத் திறனாளி அடையாள அட்டையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் வருவாய் (மரு) என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., பயிற்சி ஆட்சியர் திரு. கௌஷிக் இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் திரு. சாலை தவவளவன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. சாமிநாதன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**